பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றஹீம்.

தருமக்காதல்


இவை
திருச்சினாப்பள்ளிஜில்லா
புத்தாநத்தம் கிராமம் கஸ்பாவிலிருக்கும்
மகாவித்வானாகிய
பி. பு. சய்யதிலிசாயபுகுமாரர்
நூர்யிஸ்மால் சாயபு
கவிராஜரால் இயற்றப்பட்டு

இலுப்பூர் மகா-ள-ள-ஸ்ரீ
சே. சஞ்சியிபுராஹீம் ராவுத்தர்
அவர்களாலும்
வேலுவார் கோட்டை
சின்னஅப்பாவுருவுத்தர்மகன்
கிராம முன்சிப் மீராசாயபு
அவர்கள் பொருளுதவியால்

மதுரை வடக்குமாசிவீதி
இ. ராம.
குருசாமிக்கோனாரவர்களுடைய
ஸ்ரீராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.
1910.
இதின் விலை] —— [அணா 2.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

தருமக்காதல்.





காப்பு.

நெடிலடியாசிரிய விருத்தம்.

பொருளதர்க்கு குடைகொடுக்குங் கடமைதீர்த்தால்
புகழ்கீர்த்தி பெருவதல்லால் சுவனமோடும்
அருளுடனே பெருவதுடன் புவியில்மேன்மை
ஆஹிறத்தி லதிபலனும் பெருஞ்சந்தோசம்
மருமலர்சூள் வாசனையும் பெருவீரென்று
மாஅயனும் திருமறையா லுரைத்தசொல்லை
கருத்துடனே புவிமனுவோ ரறியவேண்டி
கவிவாக்குக் கருள்புரிய கடவுள்காப்பாம்.

கடவுளெனும்ஆதிபரம் பொருளைப்போற்றி
காவாண்டநபிமார்கள் பாதம்போற்றி
யிடைகள்தவராத அஸ்காபுமாரும்
யிறையருள்பெற்றிலங்கு ஒலிமரையோர்தன்னை
திடமுடனேயவர்பதத்தென் சென்னியேற்றி
தேசமனுவோர்களுக்குத் தர்மக்காதல்
சடைவதுகொள்ளாமலிதைக் கேள்ப்போர்தன்னை
சபையுடன்போற்றிசெய்து சாற்றுவேனே.

பல்லவி.

தர்மத்தின்காதலைக்கொள்ளுங்கள் புவிமனுவோர்
தக்கபுண்ணியத்தைக கொள்ளுங்கள்.

அனுபல்லவி.

கருமத்தையகற்றிவிடும் காயத்தையுஞ்சுத்திசெய்யும்
பெருமைபின்சுவனவீட்டைப் பெற்றுக்கொள்ளச்செய்துவிக்கும். ()

கவிகள்.

அருமறைதனைப்படைத்த ஆதிபொருளானபரன்
அஞ்சித்தொழுகச்சொன்னான் அதின்பின்னாலேகுடையை
அன்பதுக்கொண்ணேகாலாக யாருங்கொடுக்கவேணும்
அந்தக்கடமைதன்னைசிந்தை கோணாமல்செய்ய
ஆதியன்திருமறையில் ஓதியேயறிவித்திட்டான்
அதுபோல்கொடுத்தவர்க்கு பதியாம்சுவனநாட்டை
ஆதியன்கொடுப்பேனென்றும் அகலாசினேகனென்றும்
அன்பர்கச்சொன்னமொழித் தென்பாய்மனதிலுற்று. (தரு)

எல்லாஉயிர்களுக்கும் இரணம்கொடுக்கும்வல்லோன்
எழிலாகச்சொன்னமொழி இன்பத்துடனேகேட்டு
எல்லோர்க்குமேகடமை என்றுமனதிலுற்று
ஏகசந்தோசமுடன் பாகம்தனைக்கொடுக்க
ஏகனுமேசுகத்தை தக்கவேபெருவீரென்று
ஏகனொளிவாலுதித்த யோகமகமதுரைத்தார்
என்று அசுஹாபுகளும் இசைந்தஇமாம்களும்
எப்போதுமேகடமை தப்பாமல்தரசொன்னார். (தரு)

வாசம்பரவும்புகழ் சோலைவளம்பெருகும்
வாக்காலேதானுரைக்க யார்க்கும்பெலனுமுண்டோ
வாறுதியின்பிரகாச மீரியதோர்தண்ணொளிவு
வகைகள்கனிவருக்கம் வய்யகத்தினெண்மடங்கு
வருகும்நதிஜலங்கள் பெருகியதேனமது
வாடைஅத்தர்மல்லிபோல் பேடும்அன்னக்குயில்கள்
வாங்காவலம்பரிகள் பாங்கானவாத்தியமும்
வச்சிறகாயமும்பெற்று தச்சகருவிர்சுவனம். (தரு)

பெண்கள்சுவனபதி கண்கள்சிங்காரமதை
பேருலகிலுவப்பிட யாருமிணையுமுண்டோ
பேன்தயர்செவ்வாய்யழகு காதலர்சென்னியில்கூந்தல்
பெருகிரோற்பவளம் இதழ்கூந்தல்முகில்போல
பேச்சேர்அமுர்தவாக்கும் ஆச்சிரியமோகுறல்கள்
பேதகமில்லாத பரிபூரணசந்திரன்முகம்
பெண்ணைசம்போகம்செய்ய யெண்ணமதுகொள்பவரோ
பெருங்குணமுடையர்தனக்கு தருவேனென்றுரையதுவும். (தரு)

தங்கஆபிரமாற்றுச் செங்கல்வினோதங்களும்
சக்கரத்திறுதியுடன் வைடூரியப்பதிப்பும்
தலங்களில்முத்துகளும் மாணிக்கப்புடையுடனே
தரங்கள் தரங்களுடன் நிரங்கள்வெவ்வேருவிதம்
தாருகளும்கட்டடத்தின் சாந்துகளும்யென்னசொல்வேன்
தையலர்நடனங்களும் மையலதிலேமிகுக்கும்
தம்பிதமையனோடு தாய்தந்தையுடன்வாழ
தம்பிரான்கொடுப்பேனென்றான் இன்பக்குடையருக்கு. (தரு)

கொடைகள்கொடுப்பவர்க்கு தடையன்றியேசுவர்க்கம்
கொடுப்பேனென்றேஅயனும் எடுத்துமறையில்சொன்னான்
கோமான்மொழியைக்கேட்டால் சீமானவேவாழ்வீர்
கொற்றவன்மொழியைவிட்டால் கெட்டநரகில்வீழ்வீர்
கொடுத்தபொருள்களாறு மடத்தனமானவரே
கொஞ்சஅரிவாலேநாமள் பஞ்சபாதகம்செய்குறோம்
கோரியயெமனுவந்து விரிடஉயிர்பிரிப்பார்
கொண்டுபோகபரலோகம் நன்றுபலனேகுடையாம். (தரு)

பெண்டுபிள்ளைசொத்துகளும் ஒன்றுமேதான்கூடவரா
பேயேமனக்குரங்கே ஞாயமுனக்கிதுவோ
பெருவீடுமாளிகையும். ஆடுமாடுகாடுகரை
பேச்சின்சாமார்த்தியமும் ஆச்சரியமோசனையும்
பெலமும்அளியாதென அழகும்குலையாதென்றார்
பெரியோர்தவப்புருசர் மறையோர்ராஜாக்கள்முதல்
பேணியேஇருந்ததெல்லாம் நாணியேபிரிந்திட்டது
பெரும்பாவியாகிலுமே தருங்குடையாழுவியும். (தரு)

காசுகளைதேடிச்சிலர்க் கட்டிபிருக்கினைவத்து
கனமானதன்மனது இணக்கமாய்ருசிகொடார்
கருமிகளைபோலவேறு அரும்பாவியாருமுண்டோ
கடமையின்கொடைதர்மம் கண்டுமறையோருரைத்தால்
கடுத்தமுகத்துடனே தடுத்துச்சொல்லுவதைக்கேள்
காடுமலைநாடுசுத்தி கடல்கப்பலிலுமேறி
கையாலேபாடுபட்ட மெய்யானயென்பொருளை
கண்டவர்க்கேயேன்கொடுப்பேன் னென்றதுபோலேசொல்லாமல். ()

கண்ணைக்கொடுத்தயனும் விண்ணுமண்ணும்பார்க்கச்செய்தான்
காதைகொடுத்ததுவும் வேதகீதவாக்கியம்கேள்
கணமானநாசிதனில் மணமறிஎத்தனையோ
காற்றானப்புகல நாவோடும்வாயுமீய்ந்தான்
கையைகொடுத்ததுவும் மெய்யாம்வேலைக்குதவி
கால்கள்நடைகளுக்கும் மேல்கள்அதற்குதவி
காற்றுநெருப்புத்தண்ணீர் மண்ணுடன்ஆகாயமுதல்
கலந்துமனுவுருவாய் கற்பித்தோன்கொடுக்கச்சொன்ன. (தரு)

இப்படியமைத்தநாயன் எப்படியரிவித்தானோ
இன்பமுடனேகேட்டு ஏகசந்தோஷமாக
இசைந்துநடப்போமானால் பிசகொன்றுமேநடாது
இவ்வுலகிலும்புகளா மவ்வுலகிலும்சுவனம்
இச்சையாய்க்குடையாருக்கு பட்சமுடனீவெனென்று
இறையோன்திருமறையில் இயம்பியிருக்கிறதாய்
இரசூல்நமக்குச்சொன்னார் எல்லோரறியவேதான்
ஈடேத்தமாகிடுங்கள் காடேத்தமாகுமுன்னே. (தரு)

காடேத்தம்நாள்நமக்கு கடவுள்அரிவித்தானோ
காடேத்தம்வருகும்நாள் காவியதில்கண்டதுண்டோ
காடேத்தம்நாளதுவும் கணவால்தெரிந்தோமேதான்
காடேத்தம்போகுமது கடுவிஷத்தாலேயோதான்
காடேத்தமாகுமது கத்தியாலேவெட்டுப்பட்டோ
காடேத்தமாகுமது கள்ளர்கையில்தானதுவோ
காடேத்தம்வந்திடுமோ கனஅப்புகாத்ததிலும்
காடேத்தநாளுக்குமுன் கனபலன்கொடையிடுதல். (தரு)

ஓதித்தொழுதிடுதலும் உபசாரம்செய்திடலும்
ஓயாமலேவி[illegible]த்தை சாயாமல்செய்திடலும்
ஒருக்கால்வல்[illegible]தாய் பெருங்காலம்நின்றாலும்
ஒருமித்துப்பஞ்சரிவை ஒன்றாகசெய்தாலும்
ஓதுமறையோர்கள்மீதில் காதலிப்புக்கொண்டாலும்
ஒக்குசுத்தம்பா[illegible]குக்குமுன் ஓதுசெய்துதொழுதாலும்
ஓடியகபுரைத்[illegible]டி நாடிபாத்திகாச்செய்தாலும்
ஒருக்கால்சுவர்க்கம்பூகான் பெருங்கடன்ஜகாரத்தைகொடான். (தரு)

நாற்பக்குஇருபத்தஞ்சுரூபாய் கொடுக்கும்படி
நாவலஆகிமொழியைகவலை கொள்ளாமலீந்தார்
நாகுமுசாமற்றுமுள்ள நபியுமவர்களுமத்தும்
நாதனசொல்லாலேயணம் காதலிப்புடன்மகிழ்ந்தார்
நட்பமும்நல்லரிவில்லா அற்பமனுவானவரே
நாருமுகம்மதுடபேரு உம்மத்தென்றுரைத்தால்
நாருமலேவிளக்கை கூறுகவேகடத்தும்
நதலால்நபியுரைத்தார் கதலாதிரிடக்குடை. (தரு)

நீவரும்போதுபொருளுன் கூட வந்ததுண்டோ
நீ[illegible]மேலோகத்துக்கு கொண்டுபோவாயோபொருளை
நினைத்துபாராமலதில் கனத்தாசைகொள்ளுகிறாய்
நிலைத்துசெல்வமென்று நினைத்துயிருக்குகிறாய்
[illegible]அரிவாலேபொருள் பாஷப்புரட்டுதன்னை
நித்தம்ஒன்றுக்கெத்தயோ உத்தருணமாறுதடா
நீயுமதைநம்புவதேன் அதுஉன்னைவிட்டிடுமே
நிஜமேசத்தியமாக வஷமாய்கொடையைநாடி, (தரு)

மண்டலத்தில்கொடைதந்தேதன் மகராஜபேறுபெற்றோன்
மாண்டுபோய்வர் திரேகம் பூண்டுமண்ணோடேஅழிந்தும்
மாவுலகழியும்வரை காவதுநில்லாதுபுகழ்
மனுவோர்புகழ்வதுபோல் மாஅயன்புகழுகிறான்
மங்காமலேயவாக்கு பொங்கும்சுவர்க்கமுண்டு
மடையாவுத்தகுணத்தை விடையாநல்லரிவாலே
மய்யல்கொண்டுமேதினமும் நொய்யாதபுத்தியுடன்
மாதவபலன்கிடைக்கும் நீதமேபெரும்கொடையால் (தரு)

சொத்தின்கடமைகொடான் மற்றபுண்ணியமொன்றேறுது
சொத்தும்பிரிந்திவிடும் உத்தவுயிர்போகுமுன்னே
சொத்தின்மேக்கமேகொண்டு சோம்பேரியாகிடுவாய்
சொத்துமுனக்கிருந்தால் உற்றோர்விரோதியடா
சொத்தாசைகொண்டல்லவோ கத்திகத்திசாகுகிறாய்
சொத்தேஉனதுஉயிர் சத்ராதியாகுதடா
சொத்தேதகலகமதை மெத்தவருத்திவைக்கும்
சொத்தைக்கெடுவழியா லெத்தாதிருக்கும்கொடை. (தரு)

பாதகம்கொடுமைதிறம் பாருலகெல்லாம்புகலும்
பாவியென்றகெட்டபெயர் நீங்கிஆவியும்சுகத்தை
பர்பலவிதங்களுடன் அற்புதமாகபெருகும்
பஞ்சலட்சணஅழகும் தஞ்சமாய்குடியேகொள்ளும்
பசிதாகமணுகாமல் ருசியுடனேபொசிப்பும்
பகர்ந்துயேழைகளுக்கு உகந்துஉண்ணக்கொடுக்கும்
பாவாகொடையிடுவோன் தாதாவேனும்பெயரை
பாங்காய்பெருகும்படி நீங்காகொடையிடுதல். (தரு)

செத்தாலொருபிடிமண்ணுத்த வாயிலேவிளுகும்
செகத்தில்திரும்பிவந்து பிகைதீர்க்கவழியில்லை
செய்பநன்மையின்காலம் கையாலழிந்துவிடும்
செம்போஇரும்போகல்லோ வம்பாஉனதுமனம்
சேஸ்ட்டபுத்திரருந்தன் நாட்டத்தால்நன்மைசெய்யார்
சேரநரம்புசவ்வும் மூளைகரிபெலும்பும்
சேறும்புளுபூச்சியும் தாழும்மண்ணாகவுடல்
செல்லாகபோகுமுன்னே உல்லாசநன்மைசேர, (தரு)

தேடியேருசிக்கத்தின்றான் வாடியேமுகம்கடுத்து
தேடியேநல்லுடைவாங்கி மோடியுடனேஉடுத்தான்
தேசமதில்நல்வசன வாசனையில்லாதபதர்
தெய்வபக்தியுமில்லா அவ்வாய்மிருகம்போல
தேசதியாகிவந்து நேசமுடனேகேட்டால்
தேனாதெருவிருந்துதானே வந்தபொருளோ
தேடியேயென்பொருள்களை கெட்டிநிக்கவோவந்தீர்
தெம்புமனவம[illegible]ரைப்போல் அன்புகெடபேசாமல். (தரு)

யாகமொன்று[illegible]சால்லுகிறேன் பாகமுடனேயதையும்
யாரு[illegible]ன்றுங்கேளும்கூறும் புத்தியதனை
யாரோ[illegible]ரிதன் பேறோசிமாளெனவே
யண்பானமகளொன்று தென்பாயவனுக்குண்டு
யவளின்சமுகம்தனில் யாசகன்ஒருவன்வந்து
யம்மாயெனதுபசி சும்மாவிடுகுதில்லை
யாசகமாயெனக்கு போஜனமீந்திடென்றான்
யாறோயேழையென்றவள் சீறியெட்டியொன்றீய்ந்தாள். (தரு)

பசியானயேனோயவன் பகர்ந்தரொட்டியைவாங்கி
புக்கதின்னாமல்வைத்து தக்கபசியைஆர
பார்த்தான் அவள் தகப்பன் வியர்த்தேஉடல்கமெல்லாம்
பயலே உனக்குரொட்டி நவிலக்கொடுத்தவர்யார்
பகர்ந்திஎனக்குமொழி உகர்ந்துசொல்லடாவென்றான்
பயந்துபக்கிரவனும் நயந்தமொழியுடனே
பாவாகிருவயதின் தாதாகேர்க்தாளொனவே
பாய்ந்தான் மனையிர்குள்ளே தான்சாகபோகிறவன். (தரு)

விகையில்மிரக்கமில்லான் யெழிலானதன்மகளை
விழுத்துமுறட்டடியும் யெட்டிஉதைத்ததுடன்
மீய்ந்தாளேரொட்டியதை யிசைந்தவலதுகையை
இருக்கிப்பிடித்துகையை நறுக்கினன்மணிகட்டிற்
கீறல்துடித்து அரிவெல்லாம்தடுமாறி
நிறையவல்லவனிது யெளுநினவிதியென்று
யிருக்கும்போதூருஜனம் எல்லாம்விசனமுற்று
யிருதயம்கலங்கினரே ஒருவரிதுபோலாகாதீர். (தரு)

உளரிலுள்ளவாலிபர்களுற்ற வலுவானவர்கள்
உள்ளபொருளத்தனையும் ஒருமிக்கக்கொள்ளயிட
உலுத்தமடப்பயலின் செலுத்தியெல்லாம்குறைய
உருட்டிகைகால்களையும் பிரட்டியிருக்கிகட்டி
உளமைபோலேதானிருக்க வாயினில்துணியைவைத்து
உளசிமுதல்பாசிவரை ஒன்றுமில்லாதெடுத்து
உதயகாலத்துக்குமுன் பதைபராக்காகினர்கள்
உத்தபெண்டிர்வந்துகண்டு செத்திடென்றனாதலாமே. (தரு)

விசனத்தால்நோவுகொண்டான் வேருபொருளொன்றுமில்லை
வியாயில்லாமல்போச்சு சுவரட்டீனசிலவுக்கு
விக்கிசிலகாலத்துக்குள் தூங்கிச்செத்துப்போயிவிட்டான்
வீடுமில்லாமலாச்சு ஒடுஒன்றுமிச்சமில்லை
வெங்கைவெட்டுப்பட்ட ஆசையின்னாள்தனியானாள்
விஞ்சப்பிக்குறைந்து ஊருகள்தோருமலைந்து
விரும்பிபிச்சையைக்கேட்டு அருந்திஉண்ணும்கதையை
விண்டேஉரைக்குரேன் நன்றாய்உகந்துகேட்டு. (தரு)

நேரம்பகலின்காலம் பனிரெண்டுமணிவேளை
நேராய்ப்பாத்திரமொன்று கூராய்யெடுத்துக்கொண்டு
நேசமுடன் ஓர்மனையில் கூசாமல்அன்னக்கேள்க்க
நேர்வழிபார்வைதெரி யாகாதினைகயவன்மகனும்
நெட்டாமகப்பைதனி லுற்ற சாதம்கொண்டுவிட
நேமமுள்ளபெண்ணவளை காமமுடன்பார்த்துரைப்பான்
நேரிழையேயென்னையும்நீ சீழுகலியாணஞ்செய்யடி
நெசமென்றுஒப்புக்கொண்ட வாசகத்தைக்கேட்டு. (தரு)

நாட்டார்தனையழைத்து நல்லமறைகளும்ஓதி
நாயன்கிருபையினால் நேயமங்கில்யம்பிட்டு
நாலாருமாஸத்தைக்கழிப்பின் உல்லாசமாய்மனைபெண்
நாடாம்தன்பதிவிட்டு ஊர்வேறுபோகுமப்போ
நடுமத்தியகாலம் நல்லகட்டுசாதமதை
நன்றாயவிள்க்கச்சொல்லி பெண்ணுனவள்குறைந்து
நல்லமுகம்வாய்கழுவி சொல்லினளேதேவியர்க்கு
நாயகியேயென்கலத்திற் காடிதின்னவாருமென்ற. (தரு)

வெட்டுப்பட்டகைபதுவும் வெளியாகிடுமேயானால்
வேகமுள்ளதன்கணவன் போகவழிசெய்வானென்னை
வெறுத்துவிசனமுற்று கருத்துமனங்கருகி
வேங்கைதயேநானொருத்தரும் சேர்ந்தேதுண்டது இல்லை
வேர்ப்பம்கொள்ளாமல்தின்னும் அற்பநேரத்தில்யானும்
வெருசருக்குடன்பின்னே வெளியாவேனென்றனளே
வேங்கையைப்போலே வெகிரிவிழிகள்சிவந்துகோபம்
வேளையோமத்தியகாலம் தானுமென்றுரையைகேட்டு. (தரு)

ஒய்யாரமானவர்க்கு ஓராருமாசம்வரை
ஒருகைமுடம்தனை ஒழிவாகவைத்திருந்தேன்
ஒளிவான்பழிதிது வெளியாகுதேஐயனே
ஒற்றைக்கைபழுதைக்கண்டால் விட்டோட்டநாடிவார்
ஓகோயெனதுன்றி யேருதோதான்பிச்சைக்கெதி
ஒன்றானஆதியனே நன்றாய்பசியருக்கு
ஒருதுண்டுரொட்டிதந்தேன் கருமம்வேரேயேஇல்லை
ஓங்காரதுக்கத்துடன் தாரைகண்ணீர்வடித்தாள். (தரு)

துக்கத்துடனழுக தக்கபெரியோன்கடவுள்
துண்டான்வலதுகை பெண்டானவளுக்கீய்ந்தான்
துரிதபுருஷனுடன் பரிசுத்தகையதனால்
துடர்ந்துபசிகளாரி நடக்கும்வழிதனிலே
துஷ்டகுணமானபெண்ணை கண்டுகொண்டதென்னவிதம்
துயரம்நடந்ததெல்லாம் துப்புரவாகவுணர்த்தாள்
துல்லியபுருஷனவன் சொல்லியதெல்லாம்மறிந்து
துய்தானவல்லவனின் செயலைமிகப்புகழ்ந்தான். (தரு

இன்னுமிப்படிக்கொற்ற யெழிலான்வாக்கியங்கள்
இருந்துச்சொல்வோமென்றால் பென்னூல்முடியவில்லை
ஈகைக்குணமுடையோர் யோகப்புருஷரென்றும்
இறையோன்திருமறையில் குறையன்றிஅறிவித்தான்
இருலோகம்தன்னிலுமே பெருவாழ்வேருமையென்ற
இட்சையைமனதில்வைத்து தட்சணிடத்தனிலே
இசைச்சுவர்க்கமதை அசத்துகொள்ளாமல்பொ
ச்சைத்தருமக்கொடையோக மனதில்கொண்டு. (தரு)

ஆதியைத்தொழுதும்பள்ளி கட்டுதற்குமீந்தவர்க்கும்
ஆறுகள்குளங்கள்வெட்டி அடுத்துசத்திரம்கட்டி
அன்னதானங்களிடம் கன்னிதானங்களுடன்
ஆதியன்மறைதன்னையே ஓதிவைக்கவேகொடுத்தால்
அகலாதருமமது பக்யுகமேவன்றும்
அய்யாமெய்யாகயிது பொய்யல்லசத்தியமே
அறக்குணதகிஞன் றுயிறும் பிரிச்சல்கொள்ளும்டலைவிட்டு
அதற்குமுன்புண்ணியத்தை அகலாமல்செய்யவெண்ணி. (தரு)

கைகால்முடங்களுக்கும் கண்கள்தெரியாதவர்க்கும்
கற்றபெரியோர்களுக்கும் உற்றகுலமேயினட்கும்
கட்டுமுடையோர்வைமுதல் மற்றுபகாரங்களும்
கருத்திக்கொடுக்கமனம் உறுதிகொண்டாலேயவர்
[illegible]அதனால்செய்தீ முடிமையின்பாவமெல்லாம்
கருத்தன்பொருத்துதனி உற்றசுவர்க்கங்கொடுப்பான்
கையாலேநன்மைதின்மை மெய்யாய்பெருகும்வழி
கண்டேநலத்தைசெய்தால் உண்டுமசுவர்க்கமென்று. (தரு)

சந்தோசமானஉயிர்தந்தோன் தனையரிந்து
சாலையமில்லாமலேதான் யேழைபரதேசிக்கு
சக்காத்திடும்பொருளை வைக்காமலேகொடுக்க
சட்டம்உனக்கும்உண்டே கெட்டமனமானவனே
சாங்காலம்வரும்போது பாங்காய்கொடுப்போமென்றால்
சம்பத்தின்வாழ்வதையும் நம்பாதேயொருக்காலும்
சடுதியில்வாயடைப்பம் படுதீயும்பட்டிடுமே
சற்றுநேரத்திலழியும் உற்றகடனைகொடுக்க. - (தரு)

தன்காலந்தன்னிலேதன் பெண்ணும்பிரிந்திடுது
தன்காலம்தன்னிலேதன் பிள்ளைபிரிந்திடுது
தன்காலந்தன்னிலேதன் பொருளும்பிரிந்திடுது
தன்காலம்தன்னிலேதன் மாடாடுபோயிடுது
தன்காலம்தன்னிலேதன் தால்யீகம்போயிடுது
தன்காலம்தன்னிலேதன் உடையும்பிரிந்திடுது
தன்னோடுஉடலைவிட்டு பொன்னுயிருபோயிடுது
தானும்அதற்குமுன்னே ஞானம்தனையறிந்து. (தரு)

உத்தன்முகந்தனிலே உத்தஅளவில்லைஅய்யா
உத்தன்கண்பார்வையது மெத்தக்கொடுமையடா
உத்தனின்வார்த்தையெல்லா மெத்தகலகசத்தம்
உத்தன்கைசொத்தினால் உற்றோர்க்குதவியில்லை
உத்தன்பொருளதையும் செத்தாலும்யீயவொட்டான்
உத்தன்தான்சாவதற்கு மெத்தசெய்யாதேனென்பான்
உத்தன்பொன்வெள்ளியெல்லாம் மெத்தகொடியவிஷம்
உத்தனவன்குளியில்கொத்தும் அரவமும்தேள். (தரு)

கருமிப்பயல்களுக்கு கனசொத்திருந்துமென்ன
கருமிப்பயல்களுக்கு காடுவீடிருந்துமென்ன
கருமிஉத்தப்பயலின் கையில்மோதிரமென்ன
கருமிஉத்தன்ஜடலம் பெருமையாய்ப்பெருத்ததென்ன
கருமிஉத்தப்பயலைக்கண்டும் பலனுமென்ன
கருமிப்பயல்முகத்தில் கனஅழகுஇருந்தென்ன
கருமிப்பயல்களுக்கு தர்மமொன்றறியாது
கருமிதனத்தைவிட்டு பெரும்சவனம்பெறவே. (தரு)



கடலைக்காணபெரிதாம் கனதர்மமென்றகுடை
கடலைக்காணபெரிதாம் கனகுடையாளர்மனம்
கடலைக்காணபெரிதாம் காவேர்புகழுவது
கடலோசைதக்கதியும் கர்ணன்நல்லமனுமே
காத்துஅடிக்கும்போது தூத்திக்கொண்டபேர்களய்யா
கடவுள்சமுகந்தனிலிடை விடாசிநேகிதர்
கஞ்சயிப்படிநண்மை நெஞ்சாரவிட்டிடாமல்
கய்யால்செய்காலமிது மெய்யாகவேதினமும். (தரு)

வ...சைதரும்மீட்டோர் வயதைநேடுகமதாய்
வல்லோன்கொடுப்பேனென்று எல்லாமனதியிற்சொன்னான்
வாக்கையெப்படிகொத்த யாகமொன்றறிவிப்பேன்
வஞ்சகமில்லாதமனம் நெஞ்சத்திலிருத்தியே
வளியாயரிந்துகேட்டால் தெளிவாகுமேகுளமும்
வையகத்தின்வாழ்வதிலே தப்பருபேறதைப்போல்
வஞ்சனையில்லிருணியம் நெஞ்சாரசெய்திடினும்
வத்தாக்குடையருக்கு யெத்தாலுசத்தியமே. (தரு)

மூசாநபியவரின் நேசசிநேகரொன்று
மூசாநபிசமுகம் யேகியவர்வந்துநின்று
மூசாநபியவருக்காவை சலாமுரைத்து
மூசாநபியயெனக்காஞ்ச நிக்காகுநாளை
மூந்திளனக்குவிடை தந்து அனுப்புமென்றார்
மூசாசிநேகர்கையை மூகந்துதஸ்பீகுசெய்து
முன்னோன்கிருபையென்று முடுகஅனுப்பினரே
மூசாநபிசமுகம் காசாஉயிர்பிரிபபோர். (தரு)

ஏமனென்றவீசராயில் மூசாநபிசமுகம்
ஏகியவார்த்தையெல்லாம் எசவாய்த்தெரிந்துகொண்டு
எங்கேமூசாநபியே ஒங்கள்சிநேகிதமரு
எடமேயில்லைநிக்காகு திடமாகச்செய்யநாளை
எட்டோடுகாலுமணிக்கேகி உயிர்பிரிக்க
ஏகாந்தமானவனுமே போகஉத்திரவிட்டான்
எட்டுநாள்காலமதை திட்டம்பொருக்கவென்று
எவும்நபியேசிலவெல்லாம் விருகுபிண்டார். (தரு)

நாயன் தனைப்புகழ்ந்து நபியாம்மூசா அவரும்
நல்லமனமதினில் சொல்லத்தகாவிசனம்
நாடிமனதிற்கொண்டு வாடியிருந்தனர்கள்
நன்றாய்மூசாசினேகர் சென்றார்தனைவிட்டு
நம்புதலாய்வொருபக்கீர் அன்புடனவரைக்கண்டு
நானேபெண்குமருள்ளோன் நல்மூசாவின்சினேகர்
நாடோசிமாவென்றும்மை கோடாகோடிசொல்லுது
நாதாநல்மனத்தோரே யேதாகிலுங்கொடென்றான. (தரு

குமர்நிறவேற்றுதற்கு கொடுத்தாரேநூர்திருகம்
கோரியபொருளைவாங்கி வீரியபக்கீரவரும்
கொத்தவன்தனைப்புகழ்ந்து உத்தகமிலுங்கொருது
கோமானிவர்வயதை சேமமுடனேயேதான்
கொடுத்துசென்றதுபோக அழுந்தநூறுவயதை
கொடுத்திடவேணுமென்று அடுத்துத்தவமிருந்தார்
கோளதுயில்லாமலேயன் நீளவயதைக்கொடுத்தான்
கோமானின்றுதர்மூசா நேசசினேகிதற்கு. (தரு)

தருமம்கொடுத்தமூசா நபியின்சினேகிதரும்
தானும்சிலபேர்களும்போய் தரும்பெண்ணிக்காகுசெய்து
தன்பதிகேர்க்குவந்து அன்புடனேவாள்ந்திருக்க
தையலின்கேர்ப்பமதனில் துய்யஆலீங்களுமூர்
தரையிர்ப்பிரந்துஅவர் நிணாகாலம்நார்ப்பதனில்
தகப்பன்பின்ளையுடனே உகப்பாய்மூசாசமுகம்
தக்கசலாமுரைத்து பிக்கீசவாபுபெற்று
தனிவிஷளங்கலெனும் கனிவாயுரைத்துப்போனர். (தரு)

யெமனென்றயிசுராயீலிருக்குமச்சமையம்
யேகியதாரேனுமேபேரும் யிடம்விட்டுபோனபின்பு
இறையவன்றூதர்மூசா யெமனிடக்கேள்க்கலுற்றார்
யென்னிடத்தில்வந்தபேர்கள் கன்னியறிவீரோயென்று
யெனக்குத்தெரியாதென்று யிசுராயிலுமுரைக்க
யெந்தன்சினேகிதர்க்கு யின்பக்கலியாணஞ்செய்ய
யேகியசமையத்தினில் போகவேண்டாமென்றானே
யெட்டோடுநாலுமணியிலவருயிர் கொல்வேனென்றீர. (தரு)

நாளையிவருயிரை நாடிப்பிடிக்கும்படி
நாயனுரைத்தானென்று நானுமறியச்சொன்னீர்
நாளோவருஷமிதுநீள நாப்பத்துமாச்சு
நன்றாய்நுஞ்சுகுளங்கைத பெண்டுமிதருடனே
நாடாதுநோவுபிணி வாடாதிருக்கும்விதம
நாயன்கர்பினையிதோ நாடிநீர்உரைநீரே
நல்லவிதத்துடனே சொல்லநீர்வேண்டுமென்டார்
நடுங்கியிசுராயீலும்லுங்கி உரைக்கலுற்றார். (தரு)

ஒடுங்கிஉடல்நடுங்கி ஓதுவதெல்லாமடக்கி
ஒன்றானஆதியனும் தெண்டனைசெய்திடுவானே
ஒருபோதுமேமாதி வருகாதுளன்மனதில்
ஓகோஇந்தப்பிதம் விட்டேகவழியேயில்லை
ஒத்தாசையாகஉம்மை நத்தாசைகொண்டேனையா
ஓதிப்பொருப்பதுடனே வேதமோதியிது
உற்றமனதில்வந்த திட்டமேதுக்கெனை
ஓராறஞ்சேர்ந்தவனே நேருங்கேளுங்களென்றார். (தரு)

றகுமானெனுங்கடவுள் ரப்பேஅறிந்தவனீ
றட்சகனுயிரைதந்து பட்சமதாய்பாதுகாப்போன்
ரகசியம்பிராசியமும் வகையுடன்தெரிந்தவனே
ராச்சியபரிபாலனும் காட்சியுள்ளவல்லவனே
ரெண்டுபேர்சினேகர்நாங்கள் வெறான அமீர்பிரிக்கசொல்லி
ராத்திரிபகல்கணக்கில் நாப்ப அவைதுக்குமான
றப்பேயிஸ்ராயிலுக்கு அப்போஅறிவித்திருக்கீ
ருஜமேயிதுவரையில் கூசாதிருப்பதுமேன. (தரு)

குமர்நிறவேற்மகற்கு கொடுத்தாமே நார்திருகம்
கொடுத்ததைபெற்றுக்கொண்டு அடித்துளன்சமுகத்தில்
கோரியதிவாவும்செய்தான் நாருவயதைதக்கொடுக்க
கோத்திரம்தனைக்கவென்ற கேத்திகபூலாச்சுது
கொற்றவர்யிஸ்ராயிலுக்கு உத்தமரதியாச்சு
கொடைகள்கொடுப்பதுபோல் திட தர்மங்வேறேயில்லை
கொடுப்பவனைத்தடுக்கும் கொடும்பாவியைத்தினமும்
கொண்டுபோய்நரகில்விட்டு தெண்டனைசெய்வேனென்றனன். (தரு)

மண்டலத்திலேயோ பரதேசிகள் மனங்குளிர
மகிழ்ந்துஅவாவும்செய்தால் உகந்துபெரியவனும்
மனம்போல்குடுப்பேனென்று கனமறையானுரைத்தான்
மாதாபிதாபிரியம் போதாதவன்பிரியம்.
மதுவும்பால்பழம்தேனும் சனுறயின்பமுடனே
மாஅயன்கொடுத்துயிர்த்த காயத்தைதேவளர்த்தேதான்
மல்லிகைமுல்லைஅத்தரும் மகிழ்ந்தவாசனையோடு
மணக்கும்சவனபதி கனத்தாசைபீசேவென்றான் (தரு)

காமம்குலைகளவை நேமமுடனறுக்க
கருத்திற்கல்லபுத்தியை பொருத்தத்துடனேவைக்க
கண்டபொய்சாக்ஷிகளும் விண்டுபொய்சத்தியமும்
காவுனில்கோளும்குண்டணி நாவினின்றுரைக்கிறதும்
காங்கைநெருப்பதினுல் பாங்காம்சொத்தைசுடுதல்
கன்னிர்க்கண்டபெண்ணதனை கலர்ந்துபுணருவதும்
கர்த்தன்சமுகந்தனில் பொருந்தக்கேட்டவேணெண்ணி
காயத்தைதகத்திப செய்யுபாயத்தைதெரித்துமேதான். (தரு)

வட்டிலாவுனிலஞ்சம் எட்டிபேபார்க்கவொண்ணு
வட்டிக்கதையைசொல்ல சட்டம்போருதெனக்கு
வட்டிசம்பார்த்தனேயோ வட்டப்புரையதைப்போல்
வட்டிப்பொருள்தரையும்திட்டம் தேயும்புரைபோல்
வட்டிலாபத்தைதின்டோன் கெட்டநஜீசைதின்டோன்
வட்டிபலிசையுள்ளோன் கெட்டமுருதாலெவே
வல்லோன்முகம்மதரும் பெல்லாமறையிற்சொன்னுர்
வஞ்சபாவத்தைவிட்டு அஞ்சித்தொழுதுமேதான். (தரு)

தாயாம்தந்தைகுருவை நேமமுடனேவையார்
தனியோன்தனைத்தொழுதும் தக்கபலன்பெருகார்
தாயாம்தகப்பனிருபேர்கள் பதம்பணிய
தருவேனசுவர்க்கமென்று தனியோனுரைத்தனனே
தட்டுகெட்டபாவத்தாலே கெட்டலைக்குபோகாமலே
தாடிகள்ளுகஞ்சாஅபின் மோடிபாவமாக்தலமை
தானுவேணுமென்றருந்தல் கோனின்கோபத்தைவற்தும்
தற்சகன்நம்மனோமனே ரக்ஷித்தாளவேணுமென்று. (தரு)

மிஸ்க்கீன்எனையவர்க்கும் மிடிமையுடையவர்க்கும்
மிச்சவார்த்தைதபடித்த அச்சமில்லாதவர்க்கும்
மீனருசியில்வந்த ஞானம்உடையவர்க்கும்
மீறும்கல்வியையுள்ள கூறுமுடையவர்க்கும்
மின்னும்மாந்திரியத்தில் உன்னிதமானவர்க்கும்
மின்பவயித்தியவர்க்கும் மேலாம்பெரியவர்க்கும்
மிணஷிகொடுக்குறது கனத்தகடன்மையென்று
மேலோன்சொல்லாதலாலே தாளாமலேகொடுத்து. (தரு)

புவியில்புகழ்மிகுந்த புண்ணியர்தீனோர்வாளும்
புத்தாநத்தம்நன்னகரில் புலவன்னூரிசுமாலும்
புருக்கான்மறையின்சொல்லை திருகத்தமிழாளுறைநான்
புத்தியில்மகிழ்ச்சிகொள்ளும் பித்திபாவியாகிடாமல்
பூரணமூத்தொளிவான காரணமுகம்மதுட
புகழ்ப்பாகத்தும் பெரும்இகழ்ச்சியொன்றணுகாமல்
புவனமதிலேநன்மை கவனமுடனேதேடும்
பூலோகஆசையினால் காலம்வீணாகாமலே. (தரு)

வாழி விருத்தம்.

தர்மக்காதலை யான்பாட தரணியோர் வாழ்வுநீள
பெருமையாய் புகழுண்டாக பேதகமகண்டேயோட
திருமறை யுலகத்தோர்க்கு தேனமுதெனவே யின்ப
கருத்துடன் படித்துநாளும் கனபலன் பெறவே வாழி.



விளம்பரம்.

இந்த தருமக்காதலைப் பார்த்து படித்து அதில் அடங்கிய பொருளைத்தெரிந்து நடப்பவர்களுக்கு உலகரட்சகனாகிய நாயன் சொர்க்கப் பதியைக் கொடுப்பானாகவும்.

ஆமீன்.